**வட மாகாண வீதிகளின் புனரமைப்புச் செயற்திட்டம் (கண்டி- யாழ்ப்பாணம் வீதியின் 90 கிமீ நீளத்தின் புனரமைப்பு மற்றும் முன்னேற்றம்) - 2013**

---

வட மாகாண வீதிகளின் புனரமைப்புச் செயற்திட்டத்தின் (கண்டி- யாழ்ப்பாணம் வீதியின் 90 கிமீ நீளத்தின் புனரமைப்பு மற்றும் முன்னேற்றம்) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 செப்தெம்பர் 09 ஆந் திகதிய பீஎல்ஏ- 201003 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின்படி இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் நிறைவேற்றல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன**

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, முன்னாள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சும் தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது. கண்டி- யாழ்ப்பாணம் வீதியின் 230 கிமீ மைல் கல் முதல் 320 கிமீ மைல் கல்லிற்கும் இடையில் 90 கிமீ நீளத்தினை புனரமைத்து முன்னேற்றம் செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 83.0 மில்லியனாக உள்ளதுடன் அதில் ஐ.அ.டொலர் 70.6 மில்லியன் அல்லது 85 சதவீதம் சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டத்தின் ஆரம்ப வேலைகள் 2010 திசெம்பர் 01 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆகஸ்ட் 20 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. வீதிப் பிரிவின் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற வேலைகள் 2013 ஏப்ரல் 10 இல் பகுதியளவில் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியிணர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு

அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப் பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

ஒப்பந்தகாரர்கள் மற்றும் ஆலோசனையாளர்கள் ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற சொத்துக்களின் பெறுமதி பௌதீக மெய்மையாய்வு செய்வதன் மூலம் சொத்துக்களை மதிப்பிடுவதற்கும் உரிய சொத்துக்களின் பேரேட்டுக் கணக்குகளின் கீழ் காட்டுவதற்கும் பதிலாக பூர்த்தியாக்கப்பட்ட சிவில் வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பந்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.9 மற்றும் 8.6 ஆம் பிரிவின் பிரகாரம், செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்கள் வேறு படிகளிற்காக தகுதியற்றிருந்த போதிலும் ரூபா 173,863 கூட்டு மொத்த தொகையான மிகையூதியம் மற்றும் மருத்துவ விடுமுறைக்கான பணம் அவர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) முகாமைத்துவ சேவைகளின் 2007 ஏப்ரல் 05 ஆம் இலக்க 33 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக, செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களிற்கான வேதனங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் அறிமுகப்படுத்தப்பட்ட சூத்திரத்தில் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில், முறையான அதிகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் 2013 திசெம்பர் 31 வரை ரூபா 16.71 மில்லியன் கூட்டுமொத்த தொகையான சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1.69 மில்லியன் தொகையான பணிக்கொடைக்கான ஏற்பாடு செயற்திட்ட கண்காணிப்பு பிரிவில் சேவையாற்றிய காலத்தை கருத்திற்கொள்வதற்குப் பதிலாக செயற்திட்ட நோக்கங்களிற்காக

விடுவிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்களின் முழுச் சேவைக் காலத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேலதிகமாக, பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியில் மேற்கொள்ளப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு முரணாக முரணாக, மேந்தலைக் கட்டணங்களாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 1.44 மில்லியன் தொகை அனுப்பப்பட்டிருந்தது.

(உ) கொள்வனவு வழிகாட்டல்களின் 5.4.4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு, வேலைகளிற்கான தொழில் ஆரம்பிப்பு முற்பணங்களானது ஏற்பாட்டு தொகைகள் மற்றும் நிகழத்தக்கைளை தவிர்த்து ஒப்பந்த தொகையில் செலுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 2,859 மில்லியன் தொகையான தொழில் ஆரம்பிப்பு முற்பணம் மேலே குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களிற்கு முரணாக ரூபா 837.43 மில்லியன் ஏற்பாட்டுத் தொகை மற்றும் ரூபா 251.23 மில்லியன் தொகையான நிகழத்தக்கவைகள் என்பவற்றினை உள்ளடக்கிய மொத்த ஒப்பந்த பெறுமதியில் 30 சதவீதம் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போதான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதும் 2013 திசெம்பர் 31 வரையும் நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிக்க வேண்டுமென உடன்பட்ட தொகை | | பயன்படுத்திய நிதிகள் 2013 ஆம் ஆண்டின் போது | பயன்படுத்திய நிதிகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மிலலியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மிலலியன் | ரூபா மில்லியன் |
| சீன ஏற்றுமதி-இறக்குமதி வங்கி | 70.58 | 8,387.07 | 1,646.45 | 63.40 | 8,242.09 |
| இலங்கை அரசாங்கம் | 12.45 | 1,798.93 | 40.47 | 13.04 | 1,694.84 |
| | 83.03 | 10,186.00 | 1,686.92 | 76.44 | 9,936.93 |

### 3.2. பௌதீக செயலாற்றல்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், வீதிப் பிரிவின் புனரமைப்பு வேலைகள் பகுதியளவில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது பின்னர் 2013 ஏப்ரல் 10 இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆலோசனையாளரால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தப்படாத கடிதங்கள் நியம வடிவத்ததின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் இதன்விளைவால், வேலைகள் மீதான குறிப்புரைகளின் விபரங்கள், சேர்க்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டவை மற்றும் திருத்த நடவடிக்கைகளின் பிரேரித்த முறை போன்றவை கணக்காய்விற்காக கிடைத்திருக்கவில்லை.

(ஆ) செயற்திட்ட பொறியியலாளரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம், ஒப்பந்தகாரர் வேலைகளை திருத்தி மீளவடிவமைத்திருந்ததுடன் வீதிகளின் நடைபாதைகளிற்கான வடிவமைப்பு தயாரித்தல், நீர்வளகற்கை அளவை மற்றும் கிளிநொச்சி பகுதியில் 04 வீதிகளிற்கான அளவை மற்றும் வடிவமைப்பு மற்றும் 05 பாலங்களின் புனர்நிர்மாணம் போன்றவற்றிற்காக ரூபா 11.61 மில்லியன் பெறுமதியான மேலதிக வேலைகள் செய்யப்பட்டிருந்தது. வடிவமைப்பு வேலைகளின் ஆரம்ப கட்டத்தில் முறையான கவனம் செலுத்தப்பட்டிருக்குமானால் மேற்குறித்த மேலதிக வேலைகளிற்காக ஏற்பட்ட கிரயம் குறைக்கப்பட்டிருக்க முடியும்.

(இ) அளவீட்டு பட்டியல்களின் பிரகாரம், வண்டிப் பாதையின் பராமரிப்புக்காக ரூபா 130 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், ஆரம்ப ஒதுக்கீட்டின் 227 சதவீத அதிகரிப்பினை பிரதிநிதித்துவப்படுத்திய ரூபா 426 மில்லியன் தொகை என குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) ஒப்பந்த உடன்படிக்கையின் பொது நிபந்தனையின் 14.9 ஆம் உட்பிரிவிற்கு முரணாக, குறைபாட்டு பொறுப்பு காலப்பகுதி காலாவதியான பின்னர் ஒப்பந்தகாரருக்கான கொடுப்பனவிற்காக பிடிகாசின் இறுதி பகுதி சான்றுபடுத்தப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், 2014 செப்தெம்பர் 30 இல் ஒப்பந்தத்தின் குறைபாட்டு பொறுப்புக் காலத்திற்கு முன்னர், ரூபா 238.32 மில்லியன் தொகையான பிடிகாசின் பகுதி வங்கி உத்தரவாதமொன்றினை ஏற்றுக்கொள்வதன் மூலம் விடுவிக்கப்பட்டிருந்தது.

**3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதியின் குறைபாட்டின் பட்டியலின் தொகுப்பின் பிரகாரம், வீதி கற்கைகளின் குறைவான தரம் காரணமாக கருத்திற்கொள்ளக்கூடிய வீதி விளிம்புகள் சேதமடைந்திருந்தது. மேலும், ஒப்பந்தகாரரால் குறிப்புரைகளைவிட வித்தியாசமான வீதி விளிம்புகளின் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றின் ரூபா 42.47 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது என கணக்காய்வில் வெளிப்பட்டது. எவ்வாறாயினும், குறிப்புரைகளின் பிரகாரம் குறைபாடுகளை திருத்துவதற்கும் வீதி விளிம்புகளை மீள பொருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்த நிபந்தனையின் 13.6 ஆம் உட்பிரிவின் பிரகாரம், சிறிய அல்லது இடைநேர் தன்மையிலுள்ள வேலைகளிற்காக நாள் வேலை அடிப்படையில் முரண்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்ததுடன் அவற்றின் அளவீட்டுப் பட்டியலில் ரூபா 51.89 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட பூர்த்தியாக்கல் கூற்றின் பிரகாரம், ஆரம்ப ஒதுக்கீட்டு அதிகரிப்பின் 109 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 108.88 மில்லியன் பெறுமதியான வேலைகளின் முரண் மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளை விஞ்சி நாளாந்த வேலை அடிப்படையின் கீழ் கோரப்பட்டிருந்தது. மேலும், அத்தகைய சில வேலைகள் சிறிய அல்லது இடைநேர் தன்மையில் இருக்காததுடன் முறையான முரண் கட்டளை அந்த முரண்களிற்காக எழுந்திருக்கவில்லை.